## 8.82 அடிப்படை விதிகள் – அரசால் ஏற்பளிக்கப்பட்ட தனியார் மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்ட சிகிச்சை பெறும் அரசுப் பணியாளர்கள் – 60 நாட்களுக்கு மிகைப்பட்ட காலத்திற்கு மருத்துவச் சான்றின் பேரில் ஈட்டா விடுப்பு – மருத்துவக் குழு பரிந்துறையின்றி விடுப்பு ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த (அவி–III) துறை

அரசாணை (நிலை) எண். 148 நாள் : 14.09.2006

படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை) எண். 400, நிதித்துறை, நாள் . 29.8.2000.
2. அரசாணை (நிலை) எண். 377, நிதித்துறை, நாள் 3.10.2005
3. முதன்மை ஆணையர் (ம) வருவாய் நிருவாக ஆணையர் கடித எண். பணி 1(3)47993/2000, நாள் 7.3.2001
4. மருத்துவம் (ம) ஊரக நலப்பணிகள் இயக்குநரின் நே.மு.கடித எண். 81686/ICII/3/2002 நாள் : 18.6.2004.

**ஆணை :**

நடைமுறையில் உள்ள அடிப்படை விதி 74–ன் விதி 9–A (i) (a) ன் படி 60 நாட்களுக்கு மேல் மருத்துவச் சான்றின் பேரில் ஈட்டா விடுப்பு மேற்கொள்ளும் அரசுப் பணியாளர்களது மருத்துவ விடுப்பிற்கு ஒப்பளிப்பு வழங்குமுன் மருத்துவக் குழுவின் பரிந்துரை கட்டாயமாக பெறப்படவேணஅடும். அடிப்படை விதி 74–ன் விதி 9–A (i) (a) அரசு மருத்துவமனையில் உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் அரசுப் பணியாளர்களுக்கு மருத்துவச் சான்றிதழ் மீதான ஈட்டா விடுப்பு வழங்குவதற்கு மருத்துவக்குழு பரிந்துரைக்கு அனுப்ப தேவையில்லை. அடிப்படை விதி 74–ன் விதி 9–A (vii) (a) ன்படி தனியார் மருத்துவ மனையில் உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்ட அரசுப் பணியாளர்கள் அறுபது நாட்களுக்கு மிகைப்பட்ட மருத்துவச் சான்றிதழ் மீதான ஈட்டா விடுப்பு பரிசோதனைக்காகவும் மருத்துவச் சான்றிதழ் வழங்குவதற்காகவும் மருத்துவக் குழுவிற்கு அனுப்பப்பட வேண்டும்.

2. மேலே ஒன்றில் படிக்கப்பட்டுள்ள அரசாணையில், தனித் தன்மையுடைய அறுவை சிகிச்சை/ மருத்துவச் சிகிச்சை (Specialised avanced surgery/treatment) மற்றும் சில குறிப்பிட்ட நோய்களுக்கு சிறப்பிடம் பெற்றுள்ள தனியார் மருத்துவ மனைகளில் அறுவை சிகிச்சை/மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளும் அரசுப் பணியாளர்கள் மருத்துவ நிதி சலுகை பெற ஏதுவாக தனியார் மருத்துவ மனைகளை பட்டியலிட்டு அரசு ஏற்பளித்துள்ளது. பார்வை இரண்டினில் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் கூடுதலாக மேலும் சில தனியார் மருத்துவ மனைகளுக்கு ஏற்பளித்து அரசாணை பிறப்பித்துள்ளது.

3. பெரும்பான்மையான அரசுப் பணியாளர்கள் அரசால் ஏற்பளிக்கப்பட்டுள்ள தனியார் மருத்துவமனையில் தனித்தன்மையுடைய அறுவை சிகிச்சை / மருத்துவச் சிகிச்சை மேற்கொள்ள உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும், அவ்வாறு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அரசுப் பணியாளர்கள் மருத்துவச் சான்றிதழ் மீதான ஈட்டா விடுப்பு 60 நாட்களுக்கு மிகைப்பட்டு எடுக்கும் நிலை இருப்பதால் அவர்களை மருத்துவக் குழுவின் பரிந்துரை பெற அனுப்பாமல் மருத்துவச் சான்றிதழ் மீதான ஈட்டாவிடுப்பு வழங்குவதால் விடுப்பு முறைப்படுத்த ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கலாம் எனவும், முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் தெரிவித்துள்ளார்.

முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரின் கருத்துருவை கவனமுடன் பரிசீலனை செய்து அதனை ஏற்பது என முடிவு செய்தது. இதனடிப்படையில் அரசாணைகளில் அரசால் ஏற்பளிக்கப்பட்டுள்ள தனியார் மருத்துவ மனைகளில் உள்நோக்கு சிகிச்சை பெறும் அரசுப் பணியாளர்களுக்கு, மருத்துவச் சான்றிதழின் பேரில் ஈட்டா விடுப்பு வழங்குவதற்கு அவர்களை மருத்துவக் குழுப்பரிந்துரைக்கு அனுப்பத் தேவையில்லை. என ஆணையிடுகிறது.

i) அரசால் ஏற்பளிக்கப்பட்டுள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைபெறும் அரசுப் பணியாளர் அம்மருத்துவமனையில் உள்ள மருத்துவ அதிகாரியிடமிருந்து மருத்துவச் சான்றிதழ் மருத்துவ அறிக்கையுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

ii) அரசுப் பணியாளர்கள் அரசால் ஏற்பளிக்கப்பட்டுள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைப் பெறுவதற்காக மட்டும் அனுமதிக்கப்பட வேண்டுமேயன்றி நோய் கண்டறிவதற்காக அனுமதிக்கக் கூடாது. விடுப்பு வழங்கும் அலுவலர், அரசுப் பணியாளர் சமர்ப்பித்துள்ள மருத்துவச் சான்றிதழ் மற்றும் மருத்துவ அறிக்கையின் அடிப்படையில் விடுப்பு அளிக்கலாம். மருத்துவச் சான்றிதழின் உண்மைத் தன்மையில் ஏதேனும் ஐயம் ஏற்பட்டால் அப்பணியாளரை வல்லுநர் குழு / மருத்துவக்குழு முன் எல்லா அறிக்கையுடன் இரண்டாவது கருத்துக்கு அனுப்பப்படவேண்டும்.

5. அடிப்படை விதிகளுக்கான உரிய திருத்தங்கள் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தம் (அவி.IV) துறையினால் தனியே வெளியிடப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**தி. ஸ்ரீ.ஸ்ரீதர்**
சிறப்பு ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர்